பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 08 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. புதுதில்லி வந்துள்ள வியட்நாம் சோசலிச குடியரசின் பிரதமர் திரு **pham Minh chinh** குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை இன்று சந்தித்து பேசவுள்ளார்.
2. நிலக்கரி, சிமெண்ட், உருக்கு, மின்சாரம் உள்ளிட்ட முக்கியமான எட்டு துறைகளில் கடந்த ஜூன் மாதம் நான்கு சதவீத வளர்ச்சி காணப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவு தொடர்பாக திருவனந்தபுரத்தில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது.
4. தில்லியில் பெய்த கனமழை காரணமாக அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டுள்ளது.
5. புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் அன்ஷுமான் கெய்க்வாட் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திமோடி உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

புதுதில்லி வந்துள்ள வியட்நாம் சோசலிச குடியரசின் பிரதமர் திரு **pham Minh chinh** இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசவுள்ளார்.

இதைத் தொடர்ந்து குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி ஆகியோரையும் அவர் சந்தித்து பேச திட்டமிட்டுள்ளார்.

வியட்நாம் பிரதமருடன், திரு நரேந்திரமோடி இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

**[]<<<>>>[]**

ரயில்வே மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நேற்று மக்களவையில் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய பிஜேபி உறுப்பினர் திருமதி சந்தியாராய், பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ரயில்வேத் துறையில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

ரயில் போக்குவரத்தை சாமானிய மக்கள் பெரிதும் நம்பியுள்ளதால் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று புரட்சிகர சோசலிச கட்சியின் உறுப்பினர் திரு என் கே பிரேமச்சந்திரன் கேட்டுக் கொண்டார்.

ரயில்வேக்கு தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

பிஜேபி உறுப்பினர் திரு அனுராக் சர்மா பேசுகையில், மத்திய பட்ஜெட்டில் ரயில்வேக்கு இரண்டு லட்சத்து 62 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், 2047-ஆம் ஆண்டு வளர்ந்த இந்தியா என்ற கனவை நிறைவேற்றுவதில் ரயில்வே முக்கிய பங்காற்றும் என்றும் கூறினார்.

முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரயில்வேக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக சிவசேனா கட்சியின் திரு சாம்போஜிராவ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நிலக்கரி, சிமெண்ட், உருக்கு, மின்சாரம் உள்ளிட்ட முக்கியமான எட்டு துறைகளில் கடந்த ஜூன் மாதம் நான்கு சதவீத வளர்ச்சி காணப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நிலக்கரி, மின்சாரம், இயற்கை எரிவாயு, உரம் ஆகியவற்றின் உற்பத்தி சாதனை அளவை எட்டியுள்ளதாகவும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தைவிட நிலக்கரி உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகவும், அனல் மின் நிலையங்களில் அதிகரித்த நிலக்கரி தேவையை ஈடுகட்டும் வகையில் சுரங்கங்களில் உற்பத்தி அதிகரிக்கப்பட்டதகாவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி ஏழு புள்ளி ஏழு சதவீதமும், இயற்கை எரிவாயு உற்பத்தி மூன்று புள்ளி மூன்று சதவீதமும் அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக போக்குவரத்துத்துறையில் பசுமை எரிசக்தியின் பயன்பாடும் அதிகரித்துள்ளது என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்தியா – சீனா எல்லை விவகாரங்கள் தொடர்பான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கிழக்கு ஆசியாவுக்கான இணைச் செயலர் திரு கவுரங்கலால் தாஸ் தலைமையிலான குழுவினரும், சீன வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் எல்லை விவகாரம் தொடர்பான தலைமை அதிகாரி குழுவினரும் இதில் பங்கேற்றனர்.

எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் தற்போதுள்ள சூழ்நிலை குறித்தும், நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண்பது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக இன்று திருவனந்தபுரத்தில் அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் அனைத்து கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

இதனிடையே மக்களவையில் வயநாடு நிலச்சரிவு தொடர்பாக கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்பு தீர்மானத்துக்கு பதிலளித்து பேசிய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்துக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகக் கூறினார்.

துயரமான இந்த சூழலில் அம்மாநில அரசுக்கும், மக்களுக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

2014-ஆம் ஆண்டு நாட்டில் மிக நவீன வானிலை முன்னெச்சரிக்கை சாதனம் பொருத்தப்பட்டதாகவும், இயற்கை சீற்றம் ஏற்படுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பே முன்னெச்சரிக்கை தகவல்களை தெரிவிக்கும் வகையில் அவை உள்ளதாகவும் அவர். கூறினார்.

இதனிடையே வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 240-ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன், நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இதுவரை ஆயிரத்து 592 பேர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வயநாடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 82 நிவாரண முகாம்களில் எட்டாயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர், மீட்புப்படையினர் தவிர வேறு யாரும் வயநாடு பகுதிக்கு வரவேண்டாம் என திரு பினராயி விஜயன் கேட்டுக் கொண்டார்.

இன்றும் அம்மாநிலத்தின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால், நிலச்சரிவுக்கு வாய்ப்பு உள்ள பகுதிகளிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்துமாறு மாவட்ட நிர்வாகங்களை கேரள அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நீலகிரி, கோவை மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை மற்றும் வெள்ளம் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்மாவட்ட ஆட்சியர்களை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் காவிரி ஆற்றுப் படுகையில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் மாநில அரசின் தலைமைச் செயலர் திரு சிவதாஸ் மீனா, காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மலைப்பகுதிகளுக்கு பொதுமக்கள் வருவதை தவிர்க்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால் உபரி நீர் அதிக அளவில் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், காவிரி டெல்டா மாவட்டங்களில் உரிய முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு டெல்டா மாவட்ட ஆட்சியகளை திரு சிவதாஸ் மீனா கேட்டுக் கொண்டார்.

காவிரி கரையோரப் பகுதிகளில் தாழ்வான இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தினார்.

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், அணையிலிருந்து ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடி உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.,

இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காவிரி ஆற்றின் கரையோர மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனா.

இதனிடையே கர்நாடக அணைகளிலிருந்து அதிக அளவு தண்ணீர் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளது.

நேற்று ஒரு லட்சத்து 31 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று அதிகாலை நிலவரப்படி ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தில்லியில் நேற்று இரவு பெய்த கனமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியிருப்பதால் அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டுள்ளது.

மழை நீர் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மாணவர்களின் நலன் கருதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக தில்லி கல்வி அமைச்சர் திருமதி அதிஷி தெரிவித்துள்ளார்.

இன்றும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கனமழை காரணமாக விமான போக்குவரத்தில் மாற்றம் இருக்கும் என்பதால் தில்லி விமான நிலையத்திற்கு வரும் பயணிகள் முன்கூட்டியே வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

சூடான் ராணுவ தலைவர் ஜெனரல் அப்தல் ஃபடா அல் புர்ஹான் கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பியுள்ளார்.

ராணுவ நிகழ்ச்சி ஒன்றில் அவர் பங்கேற்றிருந்தபோது அவர் மீது துணை ராணுவ படையினர் ட்ரோன்களைக் கொண்டு தாக்கியதாக ராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதில் ஐந்து பேர் உயிரிழந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேசமயம் இந்த தாக்குதலுக்கு தாங்கள் காரணமல்ல என்று சூடான் துணை ராணுவப்படை தெரிவித்துள்ளது.

சூடான் ராணுவத்தினருக்கும், அந்நாட்டில் உள்ள துணை ராணுவப்படையான அதிவிரைவு படையில் உள்ள அதிருப்தி பிரிவினருக்கும் இடையே சுவிட்சாலாந்தில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெறவிருந்த நிலையில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

[]<<<>>>[]

புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் அன்ஷுமான் கெய்க்வாட் நேற்று இரவு பரோடாவில் காலமானார். அவருக்கு வயது 71.

நீண்ட காலமாக ரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நாடு திரும்பிய பின்னர் பரோடாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார்.

1975-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை 40 டெஸ்ட் போட்டிகளிலும், 15 ஒருநாள் போட்டிகளிலும் பங்கேற்ற அவர், 1985-ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 201 ரன் எடுத்து சாதனைப்படைத்தார்.

அன்ஷுமான் கெய்க்வாட் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்,

கிரிக்கெட் விளையாட்டிற்கு அவர் ஆற்றியுள்ள பங்களிப்பு தொடர்ந்து நினைவு கூரபப்டும் என்று சமூக வலைதளப்பதியில் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, கிரிக்கெட் விளையாட்டில் அவரது திறன் இந்திய கிரிக்கெட்டுக்கு சர்வதேச அளவில் புகழை பெற்றுத்தந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் திரு ஜெய்ஷா உள்ளிட்ட பலரும் கெய்க்வாட் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதற்கான இரண்டு போட்டிகளில் இன்று இந்தியா பங்கேற்கிறது.

ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு பிமிரியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திண்டுக்கல் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

***End of News***